உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௨.] மன்மத ஞு — மார்கழி மீ [பகுதி-௨.

Vol. 52. December-1955—January-1956. No. 2.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஒளவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

குடநாட்டில் மாந்தையென்பது அந்நாளில் தலைநகரமாக விளங்கிற்று. குடக்கோக்கள் அதன்கண் இருந்து அரசுபுரிந்தனர். மாந்தை நகர் இப்போது மாதை யென்ற பெயருடன் கண்ணனூர்க்கு வடமேற்கில் 13½-கல் தொலையில் இருந்து தனது முதுமை தோற்றுவித்துக் கொண்டுள்ளது; பழையங்காடி யென்னும் புகைவண்டி நிலையம் இதன் ஒரு பகுதி; இங்குள்ள பழங்கோயில் இதன் தொன்மையைக் காட்டுகிறது; இது பற்றி நிலவும் பழைய மலையாளப் பாட்டொன்று இதன்கண் பண்டைநாளில் கோட்டையும் அரண்களும் இருந்த குறிப்பைத் தெரிவிக்கிறது.[1] இந்நகரைப் பண்டைச் சான்றோர், "நன்னகர் மாந்தை[2]" "துறைகெழு மாந்தை[3]" "கடல் கெழு மாந்தை[4]" என்றெல்லாம் பாராட்டி யுரைப்பர்.

---

[1] K. P. P. Menon's History of Kerala Vol, I. P. 15.

[2] அகம். 127.

[3] நற். 35.

[4] Ibid. 395.

பெருஞ்சோற்றுதியன் குட்டநாட்டு வஞ்சிநகர்க்கண் இருந்து ஆட்சி செய்கையில் நெடுஞ்சேரலாதன் மாந்தை நகர்க்கண் இருந்து நாடுகாவல் புரிந்து வந்தான். உதியன் இறந்தபின் தான் சேரமானாய் முடிசூடிக்கொண்டு மாந்தை நகரிலேயே தங்கினான்; தன் தம்பி பல் யானைச் செல்கெழு குட்டுவனை வஞ்சிநகர்க்கண்ணே இருந்து நாடு காவல் செய்துவருமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

நெடுஞ்சேரலாதன் இளமையில் மூரஞ்சியூர் முடிநாகனார்பால் கல்வி பயின்றவன். அவரும் பிறருமாகிய சான்றோர் வேந்தர்களை வாழ்த்தும்போது "பொதியமும் இமயமும் போல நிலைபெறுக" என வாழ்த்துவது மரபாக இருந்தமை அவனுக்குத் தெரிந்திருந்தது. நெடுஞ்சேரலாதன் அதன் கருத்தை யாராய்ந்தான். தென்பொதியத்து வேளிர் சேரவேந்தர்க்கு மகட்கொடைபுரியும் முறைமையினராதலால் அவரது பொதியத்துக்கும் சேரர்கட்கும் தொடர்புண்டென்பது இனிது விளங்கிற்று. பொதியம்போல வடவிமயமும் சேரவரசரோடு தொடர்புற வேண்டுமென்பது அச்சான்றோர் கருத்தாதலைக் கண்டான். சேரநாட்டின் தென்பகுதியை வென்று ஞாயிறு தன் கடலில் தோன்றித் தன்கடலிலே குளிக்கும் என்று சான்றோர் பரவும் பாராட்டினைத் தன் தந்தை உதியஞ்சேரல் பெற்றான்; அவற்கு முன்னோருள் ஒருவன் பாரதப் போரில் பெருஞ்சோற்று விழாவினைச் செய்துகாட்டிச் சிறப்புற்றான்; அவருள் வேறொருவன் குடநாட்டிற்குக் கிழக்கில் சுவர்போல் வானளாவி நிற்கும் பாயல் மலையின் வடக்கில் விளங்கும் வானமலையைத் தனக்குரியதாக்கி வானவனென்ற சிறப்பும் வானியாற்றையும் வானமலையையும் முறையே வடக்கிலும் கிழக்கிலும் வரம்பறுத்து வானவரம்பனென்ற சிறப்பும் பெற்றான். சான்றோர் விழைந்த வண்ணம் தான் இமயத்தைத் தன்புகழ்க்கு எல்லையாக்குதல் வேண்டுமென்று நெடுஞ்சேரலாதன் நெஞ்சில் வேட்கை கொண்டான்.

நெடுஞ்சேரலாதன் முடிசூடிக்கொண்ட போது வேந்தர் எழுவர் முடிப்பொன்னாற் செய்த பொன்னாரமொன்று வழிவழியாக வரும் முறைமைப்படி அவன்மார்பிலும் அணியப்பெற்றது. அதன் கருத்தை யுணர்ந்துவந்த சான்றோர் தம்மவரல்லாத பிறவேந்தரை வென்று அவர் முடிப்பொன் கொண்டு கழல்செய்து கொள்வது

தமிழ் மரபு[1] என்றும் ஒருகாலத்தே சோநாடு எட்டுச் சிறுநாடுகளாகப் பிரிந்திருந்தது; எண்மரும் தனித்துநிற்பின் பகைவர் வேறற்கு எளிதாமென எண்ணித் தம்மில் ஒன்றுபட்டு ஒருவர் முடிவேந்தராக ஏனையோர் அவர்க்குத் துணைவராய்ப் பிரிவின்றி ஒழுகுதல் வேண்டுமென்று உறுதி செய்துகொண்டனரென்றும் அவ் வொற்றுமைக் குறிப்புத் தோன்ற ஏனை எழுவர் முடிப் பொன்னால் ஆரம் செய்து மார்பில் அணியாகப் பூண்டனரென்றும் உரைக்கின்றனர். இது கருத்துட்கொண்டே எண்மரும் கூடியிருந்து ஆராயும் அரசியற் குழு எண்பேராயம் எனப்பட்டது; பின்பு நாளடைவில் எண்பேராயம் வேறுவகையில் இயலுவதாயிற்று. இவ்வாறே பாண்டிநாடு ஐம்பெரும் நாடுகளாகப் பிரிந்திருந்து, பின்பு ஐம்பெருந் தலைவரும் தம்மில் ஒருவராய் இயைந்ததனால் பாண்டியர் பஞ்சவர்[2] எனப்பட்டனர். இக் குறிப்புத் தோன்றவே ஐம்பெருங் குழு வென்னும் அரசியலாராய்ச்சிக் குழு தமிழ்வேந்தர் அரசியலில் இடம் பெறுவதாயிற்று. சேரரினும் பாண்டியர் பழையராதலின், அவரால் உளதாகிய ஐம்பெருங் குழு முன்வைத்தும் எண்பேராயம் பின்வைத்தும் சான்றோரால் குறிக்கப் படுகின்றன. சேரநாட்டு எண்பகுதிகளும் குட்டநாடு, பொறைநாடு, குடநாடு, கொண்கானநாடு, வானநாடு, பாயல்நாடு, கடுங்கோநாடு, பூழிநாடு[3] என இயன்றன. பாண்டிநாட்டைம் பகுதிகளும் கூடல், மோகூர், சிக்கல், கொற்கை என இருந்து பின்பு மதுரை, கருவை, தென்காசி, கொற்கை, திருநெல்வேலி என்ற வூர்களைத் தலைமையாகக் கொண்டவையாகும்.

---

[1] சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடலுற்ற ஆவூர் மூலங்கிழார், "நீயே, பிறரோம்புறு மறமன்னெயில் ஓம்பாது கடந்தட்டு அவர் முடிபுனைந்த பசும்பொன்னின் அடிபொலியக் கழல்தைஇய வல்லாளனை" (புறம். 40) என்பது தமிழ் ம. பு.

[2] "செருமாண்பஞ்சவர்"—புறம். 58. [3] சங்ககாலத்துக்கு முன்னர் வானநாடு கொண்கானத்திலும், பின்னர்க் கடுங்கோநாடு வள்ளுவ நாட்டிலும் கொங்கு நாட்டிலும் சேர்ந்திருந்தன.

இவற்றை யெல்லாம் கருத்தூன்றி நோக்கிய நெடுஞ்சேரலாதனுக்கு இமயம் சென்று அதனை எல்லையாக்கிக் கோடற்கெழுந்த எண்ணம் பெருக்கத்தால் உந்தப்படுவ தாயிற்று. எண்பேராயத்தை ஒருங்கு கூட்டித் தன் எண்ணத்தைத் தெரிவித்தான். எல்லோரும் அவன் கருத்தைப் பாராட்டினர். ஏனைச் சோழ பாண்டியர்க்குத் திருமுகம் போக்கி அவர் கருத்தையறிய முயன்றான். அந் நாளில் சோழ பாண்டியர்கள் தமிழரென்ற இனவொருமையால் கருத்தொருமித்து இமயத்தைத் தமிழ்க்கு வரம்பாகச் செய்யும் சேரமான் முயற்சியை வாழ்த்தி இருபெரு வேந்தரும் இருபெரும் படைகளை விடுத்துத் துணைசெய்தனர். இமயச்செலவுக்கெனச் சேரநாட்டிலும் பெரும் படை திரண்டது. யானை குதிரை தேர் என்ற படை வகைகளும் வில் வேல் வாள் முதலியன வல்லும் படைவகைகளும் அணியணியாய் இமயம் நோக்கிப் புறப்பட்டன. இவ்வாறெழுந்த சேரப் படையுடன் சோழப் படையும் பாண்டிப் படையும் கலந்து கீழ்கடலும் தென்கடலும் மேலைக்கடலும் ஒன்றுகூடி இமயம் நோக்கி யெழுந்தது போல எழுந்து செல்லலுற்றன.

அந்நாளில் கொண்கானத்துக்கும் வடஇமயத்துக்கும் இடையிற் கிடந்த நாடு ஆரியகம் என்ற பெயர் பெற்று விளங்கிற்று. அந்நாளிற் போந்த மேலைநாட்டு யவனர் குறிப்புக்களும் அப்பகுதியை ஆரியகம் (Ariake) என்றே குறித்துள்ளன. ஆங்கு வாழ்ந்த சதகன்னரும் மோரியருமாகிய ஆரியமன்னர் தமிழ்ப்படையின் வரவு கண்டு இறும்பூதெய்தினர். படையின் பெருமையறியாது பகைகொண்டெதிர்த்த வேந்தர் சிலர் வலிதொலைந்தொடுங்கினர்; பலர் பணிந்து திறை தந்து நண்பராயினர். நெடுஞ்சேரலாதன் நினைந்தது நினைந்தவாறே நிறைவேறியதுபற்றி மனம் மகிழ்ந்து இமயத்தில் தன் விற்பொறியைப் பொறித்துவிட்டுத் திரும்பினான். ஆரியநாட்டினர் கொடுத்த பொன்னும் பொருளும் பொற்பாவைகளும் இமயச் செலவின் ஊதியமாகச் சேரநாடு வந்து சேர்ந்தன. சேரமான், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற நெடும்புகழால் சிறப்புற்றான்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இமயத்துக்குச் சென்றிருந்த காலையில் நாட்டின் ஆட்சிமுறையில் மக்கள் எய்திய நலந்தீங்குகளை நேரிற் கண்டறியும் கருத்தால் அவன்நாட்டின் பலபகுதிகட்கும் செல்லவேண்டியவனானான். தன்னொடுபோந்த தானைத்தலைவர்கட்கும் துணைவர்கட்கும் பரிசிலர்க்கும் தக்க வரிசைகளைச் செய்து மகிழ்வித்துச் சோழபாண்டியப் படைத்தலைவர்க்குரிய சிறப்புக்களைச்செய்து இன்புறுத்தினான். காடுகொன்று நாடாக்குதலும் குடிபுறந்தருவோரும் பகடுபுறந்தருவோருமாகிய நன்மக்கட்கு வேண்டிய நலம்புரிவதும் வேந்தன் பணியாதலின், அவன் அடிக்கடி தெற்கினும் கிழக்கினுமுள்ள நாடுகட்குச் சென்று வந்தான். இஃது இவ்வாறிருக்க.

கொண்கான நாட்டுக் கடற்கரையை ஒட்டித் தீவுகள் பல இருந்தன. அவற்றுள் கடம்பர் என்போர் வாழ்ந்துவந்தனர்; அத்தீவுகளுள் கூபகத்தீவு என்பது ஏனைய பலவற்றினும் சிறிது பெரிது. அக்கடம்பர்கள் அதனைத் தலைமையிடமாகக்கொண்டு தெற்கிலுள்ள தீவுகள் பலவற்றினும் பரவி வாழ்ந்து வந்தனர். இன்றைய வடகன்னடம் சில்லாவைச் சேர இருக்கும் கோவா என்னும் தீவு அந்நாளில் கூபகத்தீவமென்ற பெயர்பெற்று நிலவியது[1]; தெற்கில் தென்கன்னடம் சில்லாவைச் சேர்ந்திருக்கும் கடம்பத்தீவு (Kadmat Island) கடம்பர்கட்கு வாழிடமாக இருந்தது. கடம்பர்கட்குரிய தலைவர்கள் கடம்பு மரத்தைக் காவல்மரமாகப் பேணிவந்தமையின் அவர்கள் கடம்பர்கள் என வழங்கப்பட்டனர். கடலிற் கலஞ் செலுத்துவதும் மீன்பிடிப்பதும் அவர்கள் மேற்கொண்டிருந்தனர். கடம்பவேந்தர் சிலருடைய செப்பேடுகளில் மீன்கள் பொறிக்கப்பட்டிருப்பதும், கோவாத்தீவில் பழங்கோவா என்ற பகுதியிற் காணப்படும் வீரக்கல்லொன்றில் கடற்படையொன்று நாவாயேறிப் போருடற்றும் காட்சி பொறிக்கப்பட்டிருப்பதும்[2] அவர்களுடைய பண்டைநாளைத் தொழில் வகையை நன்கு தெரிவிக்கின்றன. சங்ககாலத்தேயே தோற்றமளிக்கும் இக்கடம்பர்கள் இடைக்காலத்தில் கொண்கானம், கருநாடகம், கலிங்கமென்ற இந்த நாடுகளில் அரசு நிலையிட்டு வாழ்ந்து கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் இடையில் பெருவிளக்கம் பெற்றுத் திகழ்ந்த

---

1 Journal of the Bombay Branch of the Royal Asiatic Society: Vol. ix. p. 283. L. Rice's Mysore i. p. 300.

2 Ep. Indica. Vol. xiii, p. 300.

விசயநகரவேந்தரது ஆட்சியில் மறைந்தொழிந்தனர்.[1] இவர்களுடைய கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் வடகன்னடம், தென்கன்னடம், குடகு, மைசூர், ஆந்திரநாடு என்ற பகுதிகளில் காணப்படுகின்றன.

கடம்பர்கள் கடம்பமரத்தைக் காவல்மரமாக ஓம்பிக்கடலகத்தே வாழ்ந்தனரெனச் சங்கஇலக்கியங்கள் குறித்துக்காட்டவும், இக்கடம்பர்களுடைய இடைக்காலச் செப்பேடுகளும் பிறவும் பௌராணிக முறையில் தோற்றம் கூறுகின்றன. பம்பாய் மாகாணத்துப் பெல்காம் பகுதியிற் கிடைத்துள்ள கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுச் செப்பேடொன்று, வேதியர்குலத்தில் அரிதிபுத்திர கோத்திரத்தில் பிறந்த இருடிகள் மூவருள் மானவியரென்பார் ஒருவரெனவும், "வேதாத்தியயனமும் சாதுர்மாஸ்ய ஹோமங்களும் யாகங்களும்" செய்து வந்தாரெனவும், அவர் மனையில் கடம்பமரமொன்று வளர்ந்திருந்ததெனவும் அதனைப் பேணிப் புறந்தந்துவந்த சிறப்பால் அவர் வழி வந்தோர் கடம்பரெனப்படுவாராயினரெனவும்[2] கூறுகிறது. ஒருகால் சிவபெருமான் திரிபுரமெரித்துப்போந்து தமது நெற்றி வியர்வையை வழித்து ஒரு கடம்பமரத்தின் அடியில் சிந்தினரென்றும், அத்துளிகளினின்று திரிலோசனக் கடம்பன் என்பான் தோன்றினனென்றும் அவன்வழிவந்தோர் கடம்பராயினரென்றும் சில கல்வெட்டுக்கள் செப்புகின்றன;[3] நந்தவேந்தருள் ஒருவன் மகப்பேறின்றிக் கயிலைமலையில் தவஞ்செய்தானெனவும், அப்போது வானவர்கள் அவன் கையில் கடம்பமலர்களைச் சொரிந்து வாழ்த்தினரெனவும், வானத்தில் அசரீரி தோன்றி அவற்கு மக்களிருவர் தோன்றுவரெனவும், அவ்வாறு தோன்றிய இருவர் வழிவந்தோர் கடம்பராயினரெனவும் வேறு சில விளம்புகின்றன.[4] களிறென்று மாலை சூட்டிக் கரிகாலனைச் சோழனாக்கிற்றென்று பழமொழியென்னும்[5] நூல் கூறுவதுபோலத் திரிலோசன கடம்பன் கடம்பவேந்தனானனென்று ஒரு வரலாறும்[6] உரைக்கப்படுகிறது.

---

[1] L. Rice's Mysore Vol. i. p. 299-300. E[2] p. Car. part i. Shikarpur Taluk No. 176. 2. [3] George M. Moraes-The Kadamba kula. p. 8. [4] J. B. B. R. A. S. Vol ix. p. 245, 272, 285. [5] பழமொழி. [6] Bom. Gazatteer. Kanara part ii. p. 78.

இவர்கள் தொடக்கத்தில் கொண்கானத்தில் வானவாசியிலும் குடகு நாட்டிலும் கருநாடகப் பகுதியிலும் இறுதியில் ஆந்திரநாட்டிலும் இருந்து அரசு புரிந்திருக்கின்றனர். இவர்களது வரலாறு கண்டோர், இவர்களைக் கோவாக் கடம்பர், வானவாசிக் கடம்பர், பாயல் நாட்டுக் கடம்பர், கலிங்கக் கடம்பர் எனப் பலவகையாகப் பிரித்துக் கொண்டு கூறுகின்றனர். குடகுநாட்டு வேந்தரைப் பாயல் நாட்டுக் கடம்பர் என்பர்; குடகுநாட்டுக்குப் பண்டைப் பெயர் பாயல் நாடு என்பதாகும். ஏழில்மலைக்கும் கோகரணத்துக்கும் இடையில் மேலைக் கடற்கரைப் பகுதியாக இருக்கும் கொண்கானத்தின் வடபகுதியைப் பங்கள நாடு என்பவாகலின், அங்கு வாழ்ந்த பங்கள வேந்தர் பங்களக் கடம்பர் எனப்படுவர். இவர்கள் மிக்க சிறப்புடன் வாழ்ந்த காலம் கி. பி. பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகள்; இவர்களது ஆட்சியும் இடைக்காலச் சோழவேந்தர் ஆட்சிபோல மிக்க சிறப்பாகவே இருந்திருக்கிறது.

இக் கடம்பர்கள் தொடக்கத்தில் வடகன்னட நாட்டுக் கோவாத் தீவு முதல் தென்கன்னடநாட்டுக் கடம்பத்தீவு ஈறாகவுள்ள தீவுகளில் இருந்துகொண்டு கடற்குறும்பு செய்வதும் கரையிலுள்ள நாட்டில் நுழைந்து அரம்புசெய்வதும் மேற்கொண்டிருந்தனர். அவரது குறும்பைப் பொறாத நாட்டுமக்கள் இமயவரம்பன்பால் முறையிட்டனர். அவன் தக்கதொரு கடற்படை கொண்டு கடம்பர் வாழ்ந்த தீவுகட்குசென்று அவர்களைக் கடுமையாகத் தாக்கி வென்றான்; அவர்களது காவல்மரமான கடம்பையும் வெட்டி வீழ்த்தித் தமிழ் வேந்தரான தங்கள் முறைப்படியே முரசுசெய்துகொண்டு வந்தான். பணிந்தொடுங்கிய கடம்பர்கள் சேரநாட்டெல்லையி லிருந்த தீவுகளினீங்கி வடபகுதியிலுள்ள தீவுகட்குச் சென்று ஒடுங்கினர். மேனாட்டு யவனர்கள் குறிக்கும் கடற்குறும்பர்கள் இக்கடம்பர்களேயென்று நினைவுகூர்தல் வேண்டும்.

கடற்குறும்புசெய்த கடம்பரைவென்ற வெற்றியினை இமயவரம்பன் தன் மாந்தை நகர்க்கண் சிறப்புடன் விழாக் கொண்டாடினன்.

கோட்டிற் பல பகுதிகளினின்றும் வேந்தர்களும் தலைவர்களும்
சான்றோர்களும் வந்து கூடியிருந்தனர். விழாவிறுதியில் இமயவரம்
பன் எழில்மிக்க யானையொன்றின்மேல் திருவுலாச் செய்தான். அக்
காட்சியினை அங்குவந்திருந்த சான்றோருள் ஒருவரான கண்ணனார்
கண்குளிரக் கண்டார்; அவர் கருத்தில் முருகவேள் கடலகத்து
மாமரத்தைக் காவன்மரமாகக் கொண்டிருந்த சூரன் முதலியோரை
வென்று விழாச்செய்த நிகழ்ச்சி தோன்றிற்று. அதன் பயனாக
அவர் இமயவரம்பனை அழகிய பாட்டொன்றாற் சிறப்பித்தார்.

மாக்கடல் நடுவில் இருக்கை யமைத்துக்கொண்டு அதன்கண்
மாமரமொன்றைக் காவன்மரமாகப் போற்றிவந்த அவுணர்கள் தீமை
செய்ததுபற்றி அக்கடல் நடுவண்சென்று அவர் தம் அரண்களை
யழித்து மாமரத்தைத் தடிந்து அவர்களைத் தீக்கிரையாக்கி வாகை
சூடிவந்த முருகவேள், தான்பெற்ற வெற்றிக்குறியாகப் பிணிமுகம்
என்னும் யானைமேலிவர்ந்து உலாவந்தாற்போலக் கடம்பரது அரணை
யழித்து அவர் பலராய் மொசிந்து காத்த கடம்பமரத்தைத் தடிந்து
அதனாற் போர்முரசு செய்து போந்த சேரலாதனே, தென் குமரிக்
கும் வடவிமயத்துக்கும் இடைநிலத்து வேந்தர் மறம் கெடக் கடந்து
யானையூர்ந்து சிறக்கும் நின் செல்வச்சிறப்பைக் கண்டு யாங்கள் பெரு
மகிழ்வு எய்துகின்றோம்:" (பதிற். 11) நீ வென்ற கடம்பர் எளியவரல்
லர்; தம்மை நேர்நின்று எதிர்க்கும் வயவர் தோற்று வீழ வாட்போர்
செய்து அவரது நாட்டைக் கவர்ந்துகொள்ளும் ஆற்றல் மிகவுடையர்
அத்தகைய ஆற்றலமைந்த தானையொடு வந்தெதிர்த்த கடம்பரைக்
கெடுத்து வலியழித்து அவரது கடம்பினையும் வேரொடு தொலைத்து
வீழ்த்திய வீறு கேட்ட ஏனைத்திசைகளில் வாழும்வேந்தர்கள், அடல்
மிக்க அரியேறு உலவுவது தெரிந்த பிறவிலங்குகள் அலமருவது
போல இரவும் பகலும் கண்ணுறக்க மின்றிக் கலக்கஞர் எய்தியிருக்
கின்றனர். இதனைக்கண்டு வியப்புமிகுந்த என் சுற்றத்தார் காடு பல
கடந்து தம்மை வருத்தும் வறுமைத் துயரையும் நினையாது என்
னொடு போந்து நீ தந்த சோறும் கள்ளும் நல்லுடையும் பெற்று
இத் திருவோலக்கத்தைச் சூழ்ந்திருக்கின்றனர்; இது காண்டற்கு
மிக்க இன்பமாக இருக்கிறது (பதிற். 12) என்று பாடினர்.

இவ்வாறு திருவுலாப்போந்து வீற்றிருந்த வேந்தனைச் சூழவிருக்கும் சான்றோரும் அரசியற் சுற்றத்தாரும் கேட்டு இன்புறுமாறு கண்ணனார் பாடியபாட்டு வேந்தனுக்குப் பேருவகை யளித்தது. இப்பாட்டின்கண் சேரலாதனுடைய படைமறவரது மனை வாழ்க்கையை உள்ளுறையால் உவமைமிகக் கண்ணனார் கூறியது அவரது புலமை நலத்தை யுயர்த்திக் காட்டிற்று. களிற்றினம் மதஞ்சிறந்து மறலுங்கால் அவற்றின் மதநீரை மொய்க்கும் வண்டினங்களை உடன்வரும் கன்றீன்ற பிடியானைகள் பசுங்குளவித் தழைகொண்டு ஓப்புகின்றன என்றது, களிற்றினம் படைமறவரையும், மொய்க்கும் வண்டினம் இரவலர் சுற்றத்தையும், கன்றீன்ற பிடிகள் புதல்வரொடு பொலியும் மறமகளிரையும், குளவித் தழைகொண்டு ஓப்புவது வேண்டுவன நல்கி இரவலரை விடுப்பதையும் குறிப்பது[1] நாட்டவரது வாழ்க்கை நலத்தை வேந்தன் அறியச்செய்து உவகை பெருகுவித்தது. சேரலாதன், அவரது புலமை நலத்தை வியந்து அவரைத் தன் திருவோலக்கத்து நல்லிசைப் புலமைச் சான்றோராக மேற்கொண்டு சிறப்பித்தான். கண்ணனார் மாந்தைநகர்க்கண் இருந்துவரலானார்.

இக் கண்ணனார் சேரநாட்டுச் சான்றோருள் ஒருவர். இவரது ஊர் குமட்டூர் என்பது. இப்போது மலையாளம் சில்லாவில் ஏர்நாடு எனப்படும் தாலுகாவின் ஒருபகுதி இராம குடநாடு என இடைக் காலத்தே வழங்கிற்று. அதன்கண் உள்ள ஊர்களுள் ஒன்று இக் குமட்டூர்; இஃது உமட்டூர் எனவும் வழங்கும். இராமநாடு கிராமக் கல்வெட்டுக்களில் யோமிநாடெனக் குறிக்கப்படுகிறது.[2]

இமயவரம்பன் கண்ணனாரது புலமைநலங் கண்டு தனது திருவோலக்கத்தில் இருந்துவருமாறு பணித்துத் தன் மனம் விரும்பிய துணைவராகக் கொண்டான். அவரும் அவன்பால் அமைந்திருந்த குணநலங்களை யறிந்து இன்புற்றார். இமயவரம்பனது செயலால் அவனது புகழ் நாடெங்கும் பரவிற்று. கடற்குறும்பெறிந்து கடம்பரை வெருட்டியோட்டி யடக்கிய நிகழ்ச்சியால் கடல்வாணிகம் சிறந்தது. நாட்டுமக்களிடையே செல்வம் மிகுந்த நல்வாழ்வு நிலவிற்று.

---

[1] பதிற். 12. [2] Proceedings and transactions of the 3rd Oriental Conference, Madras, p. 296 and 280.

இமயவரம்பன் புகழ் கொண்கானத்தின் வடபகுதியில் வாழ்ந்த ஆரியவேந்தர் சிலர்க்குப் பொறாமையை யுண்டுபண்ணிற்று. கடலகத்துத் தீவுகளில் வாழ்ந்த கடம்பருட் சிலர் நாட்டிற் புகுந்து சேரமானுக்கு மாறாக ஆரியவேந்தரொடு கலந்து பகை சூழலுற்றனர். அக்காலில் யவனநாட்டவர் கலங்களிற் போந்து வாணிகம் செய்தமையின், அவருட் சிலரை நட்புக்கொண்டு, இமயவரம்பனுக்கு மாறாகப் போர்தொடுக்குமாறு தூண்டினர். உண்மை யறியாத யவனர் ஆரியரும் கடம்பரும் செய்த துணைபெற்று இமயவரம்பனொடு போரிட்டனர். போர் கடுமையாக நடந்தது. சேர்படை கடலிற் கலஞ்செலுத்திப் பொருவதிலும் சிறந்திருந்தமையால் யவனர் நிலத்தில் கால்வைத்தற்கு வழியின்றிச் சீரழிந்தனர். அவருட்பலர் சிறைப்பட்டனர்; நேர்மையும் பணிவும் அமைந்த சொற்செயல்களால் நெடுஞ்சேரலாதன் அருட்கு இலக்காகாப் பகைவர் தலைவர் கடுந்தண்டத்துக்கு உள்ளாயினர். மிக்க குற்றம் செய்தவரைப்பற்றி அவர் தம் இருகைகளையும் முதுகின் புறத்தே சேர்த்துக் கட்டித் தலையில் நெய் பூசித் தன் நகரவர் காண நெடுஞ்சேரலாதன் கொண்டுவந்தான். மற்றையோர் பொன்னும் வயிரமுமாகிய மணிகளைக் கொணர்ந்து கொடுத்துச் சேரலாதனது அருளைப்பெற்றனர். அவன் அவற்றைப் படைமறவர்க்கும் தானைத்தலைவர்க்கும் துணைவர்க்கும் பரிசிலர்க்குமே நல்கினன். இதனைப் "பேரிசை மரபின் ஆரியர் வணக்கி, நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து, நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ, அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு, பெருவிறல் மூதூர்த் தந்து பிறர்க்குதவி" என்று பதிகம் கூறுகிறது. மாமூலனார் என்னும் சான்றோர், "நன்னகர் மாந்தை முற்றத் தொன்னார், பணிதிறை தந்த பாடுசால் நன்கலம், பொலஞ்செய் பாவை வயிரமொ டாம்பல், ஒன்று வாய் நிறையக் குவைஇ யன்றவண், நிலந்தினத் துறந்த நிதியம்"[1] என்று இசைக்கின்றார்.

இவ்வண்ணம் இமயவரம்பன், ஆரியர், கடம்பர், யவனர் என்போருடைய புறப்பகை கடிவதில் பேரீடுபட்டிருந்ததனால், உண்ணாட்டின் வாழ்ந்த குறுநிலவேந்தர் சிலர் அவனது பொருமுரண் இயல்பு

[1] அகம். 127.

நோக்காது திறைசெலுத்துவதைக் கைவிட்டுப் பகைத்து அவன் சீற்றத்துக் குள்ளாயினர். அவரது செருக்கடக்கி உட்பகையைப் போக்கக் கருதி அவர் தம்நாட்டின்மேற் படைகொண்டு சென்றான். பகைத்த வேந்தருடைய மதிலும் காவற்காடும் அழிந்தன. நிரைநிரையாகச் சென்ற அவனது படைவெள்ளம் பகைவர் படைவலியைச் சிதைத்து, அவரது செல்வத்தைச் சூறையாடிற்று. படைமறவர் அந்நாடுகளில் தங்கிப் பகைவர்வாழ்ந்த பகுதிகளைத் தீக்கிரையாக்கினர்; தீப்பரவாத இடங்களை உழுவறக் கெடுத்தனர். பாழ்பட்ட இடங்களில் வேளையும் பீர்க்குமாகிய கொடிகள் வளர்ந்து படரலுற்றன. நீரின்றிப் புலர்ந்து கெட்ட புலங்களில் காந்தள் முளைத்து வளர்ந்து மலர்ந்தன. செல்வர் வாழ்ந்த இடங்களில் வன்கண்மை மிக்க மறவர் குடிபுகுந்தனர்; பனையோலைவேய்ந்த குடில்கள்பல உண்டாயின.[1]

இந்நிலை யுண்டாகக்கண்ட பகைவேந்தர் தாம்செய்த தவற்றை யுணர்ந்து இமயவரம்பனது அருளைப்பெற முயன்றனர். அவன் அவர்களை ஒறுப்பதே கருதி யொழுகினான். மறத்துறையால் எய்தும் புகழ் அறச்செய்கையாற்றான் நிலைபெறும் என்பதை மறந்து இமயவரம்பன் மறமே நினைந்தொழுகுவது நன்றன்றெனக் கண்டார் கண்ணனார். சேரலாதனைக் கண்டு, "வேந்தே, நின் வலியறியாது பொருதுகெட்ட வேந்தர் நாடு எய்திய அழிவும் கண்டேன்; பின்னர் நீ காக்கும் நாட்டையும் கண்டேன்; நின்னுடைய நாடு மலைபடுபொருளும் கடல்படுபொருளும் ஆறுபடுபொருளும் பெருகவுடையது; ஊர்களில் விழாக்கள் மிகுந்துள்ளன; மூதூர்த்தெருக்கள் கொடிநுடங்கும் கடைகள் மலிந்துள்ளன; நின் வயவர் பரிசிலர்க்குச் செல்வமும் யானைகளும் பரிசில் நல்குகின்றனர்; நெடுஞ்சேரலாதன் நீ வாழ்க என்று வாழ்த்து அவர் வாயில் மலர்ந்த வண்ணம் இருக்கிறது; மக்கள் பகையால் விளையும் வெய்துறவறியாது இன்பவாழ்வில் திளைத்துள்ளனர்; அறவோர் பலர் ஒன்றுமொழிந் தடங்கிய கொள்கையும் அறக்கம் விரும்பும் வேட்கையும்கொண்டு அறம்புரிகின்றனர்; நீ காத்தலால அவரவரும் விரும்பியன விரும்பியவாறு பெற்று இனிதுறைகின்ற

[1] பதிற். 15.

னர்; நாட்டில் நோயில்லை; கள்ளுண்டு களிக்கும் இயவர், 'இவ்வுலகத்தோர் பொருட்டு நீ வாழியர்' என இசைப்பது கண்டேன்"[1] என்று மொழிந்து இத்தகைய இன்பவாழ்வு இச் சேரநாடு முற்றும் நிலவச் செய்க' என்று வேண்டினர்.

இதுகேட்ட சேரலாதன் அவரை வியந்து நோக்கினன். அக் குறிப்பறிந்த கண்ணனார், "வேந்தே, மன்னுயிர்க்கு ஈதலில் குன்றாத கைவண்மையும, பெருவலியும், உயர்ந்தோர்க்கு உறுதுணையாகும் சிறப்பும உடையனாய்த் திருமால்போலக் குன்றாத வல்படைத் திருக்கின்றாய், நின்பண்புபலவும் நினதுநாட்டில் விளங்கத் தோன்றக் கண்டதனால், நின் துப்பெதிர்ந் தழிந்த பகைவர் நாட்டையும் கண்டு வருவேனாயினேன்"[2] என்று செப்பினர்.

நெடுஞ்சேரலாதன் தன்னைப் பகைத்துத் தன்னொடு பொருதழிந்த வேந்தர் பொருட்டுக் கண்ணனார் இவ்வாறு கூறுகின்றாரென்பதை நன்குணர்ந்துகொண்டு, "சான்றீர், யாம் புறப்பகை கடியும் செயலில் ஈடுபட்டிருக்குங்கால் நாட்டிற்குள் பகைமை புரிந்த இவ்வேந்தர் செயல் பொறுக்கலாகாக் குற்றமாவது நீவிர் அறியாததன்று; அவர்க்கு அருள்செய்து புகலளிப்பது பகைப்பயிரை நீர்பாய்ச்சி வளர்ப்பது போலாம" என மொழிந்தான். 'வேந்தர் தமது அறியாமையாற் செய்த குற்றத்துக்கு அவரது நாட்டுமக்கள் பெருந் துன்பம் உழப்பது ஈண்டுக் கருதத்தக்கது!' என்பாராய், "நாட்டு மக்களால் பண்டு புன்செய்க் கொல்லைகளாய் இருந்தவை நீர்வளம் பொருந்திய வயல்களாயின; காட்டுப்பன்றி யுழும் புனங்கள் வளவிய வயல்களாகச் சிறந்தன; அவ்வயல்களில் கரும்பின் பாத்தியிற் பூத்த நெய்தலை எருமையினம் மேய்ந்து இன்புற்றன; மகளிர் துணங்கையாடும் மன்றுகளும் முதுபசு மேயும் பசும்புற்றரைகளும் தென்னையும் மருதமும் நிற்கும் தோட்டங்களும் வண்டுமொய்க்கும் பொய்கைகளும் எம்மருங்கும் காட்சியளித்தன. அதனால் சான்றோர் பாட்டெல்லாம் அந் நலங்களையே பொருளாகக் கொண்டு விளங்கின. இப்போது நின்தானை சென்று தாக்கியபின், அவை 'கூற்றடூஉ

[1] பதிற். 15. [2] பதிற். 15.

நின்ற யாக்கை போலப் பொலிவழிந்துவிட்டன; கரும்புநின்ற வயல்களில் கருவேலும் உடைமரங்களும் நிற்கலாயின; ஊர்மன்றங்கள் நெருஞ்சிபடர்ந்த காடுகளாயின; காண்போர் கையற்று வருந்தும் பாழ்நிலமாகியது காண மக்கட்கு நின்பால் அச்சம் பெருகிவிட்டது"[1] என்று இயம்பினர்.

இதனைக் கேட்ட வேந்தன் உள்ளத்தில் அருள் உணர்வு தோன்றிற்று. போருண்டாயின், இத்தகைய விளைவு இயல்பாதல் விளங்கினும், அருளறம் அவன் உள்ளத்தில் நிரம்பிற்று. மக்களது வருத்தம் நினைக்க அவன் நெஞ்சு நெகிழத் தொடங்கிற்று. கண்ணனார், "வேந்தே, நீ காக்கும் நாட்டுக் காடுகளில் முனிவர் உறைகின்றனர்; முல்லைக்கொல்லைகளில் மள்ளரும் மகளிரும் இனிது வாழ்கின்றனர்; மக்கள் வழங்கும் பெருவழிகள் காவல்சிறந்துள்ளன; குடிபுறந் தருபவரும் பகடுபுறந் தருபவரும் இனிதிருக்கின்றனர்; கோல் வழுவாமையால் மக்களிடையே நோயும் பசியுமில்லை; மழை இனிது பெய்கிறது"[2] என்று பாடி அவனை இன்புறுத்தினர்.

இவ்வாறு கண்ணனார் உரையால் அருள்நிறைந்த உள்ளமுடையனான இமயவரம்பன் தன்னைப் பணிந்து திறைகொடுத்துப் புகல் வேண்டிய வேந்தர்களை அன்புசெய்து ஆதரித்தான். அவனது அச்செயல் அவனுடைய தானைத் தலைவர்பாலும் தானை மறவர்பாலும் சென்று படர்ந்தது. ஒருகால் கண்ணனார் நெடுஞ்சேரலாதனுடைய பாடியிருக்கை யொன்றிற்குச் சென்றிருந்தார். அப்போது பகைவருடைய தானை போர்க்குச் சமைந்து நின்றது. அந்நிலையில், சேரலாதனுடைய தானைமறவர், ஏவல்வழிநின்ற இயவர், 'பகைவரை நோக்கி, அரணம் காணாது அலமந்து வருந்தும் உலகீர், உங்கட்கு இனி இனிய நிழலாவது எம்வேந்தனது வெண்குடை நிழலே; இதன்கண் விரைந்து வம்மின்' என்று இசைத்தனர். அதுகண்ட குமட்டூர்க் கண்ணனார்க்கு இறும்பூது பெரிதாயிற்று. நெடுஞ்சேரலாதனைக் கண்டார்; அவன் பெருந்தவறுசெய்த பகைவராயினும் அவர்கள் பணிந்து வருவரேல் போருஞ்செய்யான். உடனே அவருள்ளத்தில் அழகிய

[1] பதிற். 13. [2] பதிற். 18.

தொருபாட்டு உருப்பட்டு வெளிவந்தது. "வேந்தே, நீ கடல்கடந்து சென்று பகைவர்தங்கிக் குறும்புசெய்த தீவுக்குட்புகுந்து அவரது காவல் மரமான கடம்பினைத் தடிந்து அதுகொண்டு செய்த போர்த் முரசுக்குப் பலிக்கடன் ஆற்றும் இயவர் 'ஆணம் காணாது வருந்தும் உலகீர், எம்முடைய வேந்தனது வெண்குடை நிழலே உமக்கு நல்ல ஆறுவது' என அறைந்து அதனைப்பரவுகின்றனர்; பாடினி பாடுகின்றாள்; பகைவர் பெரிய தப்புச்செய்யினும் அவர்கள் பணிந்து போந்து திறைபகர்வரேல் ஏற்றுக்கொண்டு அவர்கள்பால் செல்லும் செற்றத்தை நீக்கிச் சீரிய அருள்செய்கின்றாய்; நின் அருட்கு ஒப்பதும் உயர்ந்ததும் நினைக்குங்கால் நின் அருளல்லது பிறிது யாதும் இல்லை"[1] என்ற கருத்தை அப்பாட்டுத் தன்னகத்துக் கொண்டு விளக்குவதாயிற்று.

நெடுஞ்சேரலாதன் போர்பலசெய்து வெற்றி மிகுந்து புகழ்பரவ வீற்றிருந்ததறிந்து பாணர், பொருநர், கூத்தர் முதலிய பரிசிலர் கூட்டம் அவனது நகர்நோக்கி வெள்ளம்போல் வந்தது. சேரலாதனும் அவர்கட்குப் பெருவளம் நல்கிச் சிறப்பித்தான். ஒருகால் கண்ணனார் பாணர் முதலியோருடைய கூட்டத்துக்கிடையே சென்று அவரது மனநிலையைக் கண்டார். அவரிடையே கடும்பற்றுள்ளம் சிறிது தோன்றியிருந்தது. உள்ள பொருள் செலவாய்விடின் மேலே பெறுவது அரிதென்ற உணர்வு சிலருடைய நெஞ்சில் நிலவுவதைக் கண்ணாரக் கண்டனர். அவர்கட்கு இமயவரம்பனது வள்ளன்மையை எடுத்துணர்த்தவேண்டிய இன்றியமையாமைபிறந்தது. விறலியரை நோக்கி, "விறலியரே, பற்றுள்ளம் கொள்ளாது நிறையச் சமைத்து வருவோர்க்கு வரையாது கொடுமின்; நிரம்பச் சமைமின்; உணவேயன்றி வேறு பிறபொருள்களையும் நெடுஞ்சேரலாதன் முட்டின்றி நல்குவான்; ஆதலால் பிறகலன்களையும் பிற இரவலர்க்குவழங்குமின்; பெற்றது குறையுமென அஞ்சாது நல்குமின்; சேரலாதன் மிகுதியாகத் தருவன்; மாரி பொய்ப்பினும் சேரலாதன் கொடை பொய்யாது; ஆகவே, நன்றாக உண்மின்; அடுமின்; எல்லோர்க்கும் வழங்குமின்"[2] என்று தெருட்டி ஊக்கினர். அப்போது அக்

---

[1] பதிற். 17. [2] பதிற். 18.

கூட்டத்தில் இருந்த ஒருவர் கண்ணனாரை நோக்கி "இமயவரம்ப னது கொடைநலம் அறிந்தோர்போலக் கூறும் நீவிரும் எம்மனோர் போலப் பரிசிலர் எனக் காணுகின்றீர்; நுமது அரசன் யாவன், கூறுவிரோ?" என்று கேட்டார். அதற்கு விடைகூறலுற்ற கண்ண னார் உள்ளம் பெருமகிழ்வு கொண்டது. சேரலாதனது சிறப்பெடுத் துரைத்தற்கேற்ற வாய்ப்புக் கிடைத்ததுபற்றி அவர் பெருமிதம் எய்தினர்.

"நுமக்குக் கோவாவான் யாரென வினவுகின்றீர்கள்; எங்கள் வேந்தன் கடலகம்புகுந்து அங்குள்ள தீவினுள் வாழ்ந்த திறல்மிகுந் திருந்த கடம்பாது கடம்பினை வேரோடு தடிந்து புகழ் மேம்பட்ட நெடுஞ்சேரலாதன்; பகைப்புலத்தே பகைவர் தமது சூழ்ச்சியால் செய்யும் எத்தகைய வினையும் அவர்கட்கு வாய்க்குமாறு இன்றிக் கருவிலேயே கெடுத்து வெற்றிமிகும் வினைத்திறம் வாய்ந்தவன்; உட்பகைசெய்யும் ஒட்டார் முன்னும் பொய்கூறாத வாய்மையுடைய வன்; தன்னைக் காணும் பகைவர் உள்ளத்து ஊக்கம் கெடுமாறு பெருமிதத்துடன் நடந்து அவரது நிலத்தை வென்று தன்னைப் பாடும் பரிசிலர்க்கு நல்கும் பண்பினன்; குதிரைகளையும் பிறவற்றை யும் பெருக வழங்கும் கொடைநலம் உடையவன்; மினையும் இடங்கும் மதிலும் ஞாயிலுமுடைய பகைவர் பலருடைய நகரங்களை யழித்துத் திக்கிரையாக்கிய அவன் தன்பால் வருவோர் வல்லுநரா யினும் மாட்டாராயினும் யாவராயினும் நிரம்பநல்கும் சீர்மையுடைய வன்; மழைமுகில் தான்பெய்யுமிடத்துத் தப்புமாயினும் சேரலாதன் இரவலர்க்கு வயிறுபசிகூர ஈயும் சிறுமையுடையவனல்லன்; அப் பெற்றியோனை ஈல்கிய அவனுடைய தாய் வயிறு மாசிலளாகுக"[1] என்று இனிமையாகப் பாடினர். அச் சொற்களைக் கேட்ட பரிசிலர் பேரின்பமெய்தினர். ஒற்றர் வாயிலாக வேந்தன் கண்ணனார் பாடிய பாட்டைக் கேட்டு அவர்பால் பேரன்பு கொண்டான்.

நாட்டில் சேரலாதன் ஆட்சிநலத்தால் வளவிய ஊர்கள் பல உண் டாயின. மக்கள் செல்வவாழ்வு நடத்திச் சிறப்பெய்தினர். சான்றோர்

---

[1] பதிற். 20.

பலர் அவனது ஆட்சிநலத்தை யேத்து போற்றி அவனை வாழ்த்தினர். பொருளும் இன்பமும் அறநெறியிற் பெருகுவிக்கும் அரசினைக் கீழ் மக்களும் விரும்புவரெனின் சான்றோர் போற்றிப் பாராட்டுவதில் வியப்பில்லை.

நெடுஞ்சேரலாதனோடு நெருங்கிய நட்பாற் பிணிப்புண்டிருந்த கண்ணனார் அவனுடைய ஆட்சியால் நலமெய்திய நாடுமுற்றுங்கண்டு மகிழ்ந்தார். அவனொடு கருத்துவேறுபாடுகொண்டவேந்தர் நாட்டிற் படையெடுத்துச்சென்று அவர்களை வென்றடக்கி அவர் நாட்டைப் பாழ்செய்வதையும் அவர் அறியாமலில்லை. போர்ப்புகழ் பெறுவதில் மகிழ்ந்து மைந்துற்றெழுகும் வேந்தர் உள்ளத்தை மாற்றி நாட்டு மக்கட்கு இன்பம் பெருகும் செயல்களில் ஈடுபடச் செய்வது வேந்தர்க்குச் சுற்றமாய்த் துணைபுரியும் சான்றோர்கடமையாக மேற்கொண்டிருந்தனர். கண்ணனார் தமது கடமையை மறந்தார் இல்லை. காலம் வாய்க்குந்தோறும் நெடுஞ்சேரலாதனுக்குப் போரால் விளையும் கேட்டினை எடுத்துக் காட்டியே வந்தார். செய்தபோர்களிலெல்லாம் இமயவரம்பன் வெற்றியும் பெருஞ்செல்வமும் பெற்றதனால், அவனது மனம் மறப்புகழையே நாடி நின்றது. மறவுணர்வை மாற்றுதற்கு அவர் எடுத்துரைத்த அறவுரைகள் கருதிய பயனைக் கருதிய அளவில் விளைவிக்கவில்லை. அவன் கருத்தை இன்பத் துறையில் செலுத்துவது ஓரளவு அவன் நெஞ்சில் நிலவும் மறவுணர்வை மாற்றும் என எண்ணினர்.

இவ்வாறிருக்கையில், நெடுஞ்சேரலாதன் ஒருகால் வேந்தன் ஒருவனுடன் போர்தொடுத்து அவன் நாட்டிற் பாசறையிட்டிருந்தான். அப்போது ஒருநாள் கண்ணனார் அவனுடைய பாடி வீட்டிற்குச் சென்றார். வேந்தன் அவர் வரவு கண்டு மகிழ்ந்தானாயினும், அவனுடைய குறிப்பு அவர் வந்த வாயின் கருத்தையறிய விழைந்தது. "வேந்தே, நீ மேற்கொண்டிருக்கும் வினை நினக்கு வருத்தம் பயக்கும் அத்துணைப் பெருமை யுடையதென அஞ்சி யான் வந்தேனில்லை; மலைபோ லுயர்ந்த புறமதிலும், அகன்ற இடைமதிலும், கணையமரங்கள் நான்று கொண்டிருக்கும் உயரிய வாயிலும் உடைய

இப்பாசறை யிடத்தே நீ நெடிது தங்கிவிட்டாய்; ஆதலால் நின்னைக் காண்பது விரும்பி வருவேனாயினேன்" என்றார். சேரலாதன் நெஞ்சு மகிழ்ந்து அவரது அன்பை வியந்து பாராட்டினான். அக்காலையில் அன்பரது அன்புபற்றிய பேச்சொன்று உண்டாயிற்று. அன்பால் பிணிப்புண்ட ஆண்மக்களாகிய எம்போல்வார்க்கே நின் பிரிவு ஆற்றாமையை விளைவிக்குமாயின் நின்னை யின்றியமையாத நின் காதலியின் ஆற்றாமை எத்துணை மிகுதியாக இருக்கும் என்பதை எண்ணுதல் வேண்டும்," என்றார்.

அவரது சொல்வலையில் சிக்கிய இமயவரம்பன் மனக்கண்ணில் அவனுடைய காதலியான தேவியின் அன்புருவம் காட்சியளித்தது; ஒருசில சொற்களால் தன் மனைவியின் குணநலங்களைச் சொன்னான். அச்சொற்களையே கண்ணனாரும் கொண்டெடுத்து, "சேரவேந்தே நின்தேவி யாவாள் ஆறிய கற்பும் அடங்கிய சாயலும் உடையள்; நீ கூறுமாறு ஊடற்காலத்தும் இனிய மொழிகளையே மொழியும் இயல்பினள்; சிவந்த வாயும் அமர்த்த கண்ணும் அசைந்த நடையும் சுடர் விட்டுத் திகழும் திருநுதலும் உடைய நின் தேவியார், நின்னை நினைத்தற்குரியர்; நின்மார்பு மகளிர்க்கு இனிய பாயலாம் பான்மையுடையது; நீயோ அதனை அவர்கட்கு நல்குதலும் செய்யாது வரைதலும் கொண்டு உறைகின்றாய்; இக்காலத்தில் நின் மார்பை நின்தேவியர்க்கு நல்காயாயின், அவர் பாயல் பெறாமையால் உளதாகும் வருத்தத்தின் நீங்கி உய்தல் கூடுமோ?"[1] என்று இனிமையுறக் கூறினார். இமயவரம்பன் கருத்து அவன் காதலிமேற் சென்றது; மேற்கொண்ட வினையை விரைந்து முடித்துக்கொண்டு தன் தன் நகர்வந்து சேர்ந்தான்.

சிலபல நாட்கள் கழிந்தன. சேரநாட்டின் ஒரு பகுதியில் வாழ்ந்த ஒரு வேந்தன், சேரலாதன் சினந்து போர்தொடுத்தற்குரிய குற்றத்தைச் செய்தான். போர் தொடங்கிற்று. பகைத்த வேந்தன் தோற்றோடினான்; அவன் நாட்டில் வாழ்ந்த மக்கள்பலர் போரினது கடுமை கண்டு அஞ்சி நாட்டைவிட்டு நீங்கினர்; ஆனிரைகள் மேய்ப்பா

[1] பதிற். 16

கின்றி நாற்றிசையும் தெறிவோடின; நிலங்கள் உழுவாரின்றிப் பாழ்பட்டன.[1] அந்நிலையைக்கண்ட கண்ணனார் சேரலாதன் தங்கியிருந்த பாசறைக்குச் சென்றார்.

அங்கே பலவகைப் படைகளும் தத்தமக்குரிய வினைகட்கு வேண்டுவனவற்றை முற்படச் செம்மை செய்துகொண்டிருந்தன. கூளிப்படை பின்னே வரவிருக்கும் தூசிப்படை முதலிய வயவர் படைக்கு வழிசெய்து நின்றது; வயவர் படைக்கருவிகளை வடித்துத் தீட்டி நெய்பூசிச் செம்மை செய்துகொண்டிருந்தனர். இயவர் முரசுக்குப் பலியிட்டுப் போர்முழக்கம் செய்திருந்தனர். கண்ணனார் இச்செயல்களை எடுத்தோதி, "நின் கூளியரும் வயவரும் இயவரும் சான்றோரும் போர்க்குச் சமைந்திருக்க நீயும் போரையே விரும்பியிருக்கின்றாய். நின்போர் வினையால் நாடுகள் அழிந்து பாழ்படுகின்றன; நாடுகளில் மக்கள் இனிதிருந்து வாழ்தற்கேற்ற வாய்ப்புப் போர்வினையால் கெடுவதால் நாட்டின் பகுதிகள் பலவும் அழிவுறுகின்றன. போர் நிகழ்தற்குமுன் அந்நாட்டு நீர்நிலைகளில் தாமரை மலர, நெல்வயல்களில் நெய்தல் பூப்ப, நெற்பயிர் வளமுற வளர்ந்து விளைந்தன; நெல்லரிவோர் குயம் நெற்றாளை யரிய மாட்டாது வாய் மடங்கின; கரும்பினெந்திரம் கரும்பின்முதிர்வால் பத்தல் சிதைந்து வருந்தின; அந்நிலையை அப்போது கண்டோர் இப்போது கைகொட்டிப் புடைத்து வருந்த, போர்வினையால் அழிந்து மாட்சியிழந்தன;[2] இவற்றை நீ எண்ணுதல் வேண்டும். இந்நிலையில் கணவனை யிழந்த மகளிர் கையற்று வருந்தும் காட்சி நெஞ்சிற் பலநினைவுகளை எழுப்புகின்றது. நின் திருநகர்க்கண் உறையும் நின் காதலி, நீ போர்த்துறை மேற்கொண்டு பாசறை யிருப்பிலே கிடத்தலால், நின்னைக் கனவின்கட் கண்டு இன்புறுவது தவிர வேறு இன்பம் காணாது வருந்தியுறைகின்றாள்; அவளை நீ நினையாதிருப்பது முறையன்று"[3] என்று சொல்லி நெடுஞ்சேரலாதன் உள்ளத்தெழுந்த மறவேட்கையை மாற்றினார். இவ்வகையால் அவனது உள்ளத்தை

---

[1] பதிற். 19.

[2] பதிற். 19.

[3] பதிற். 19.

அறத்துறையில் ஒன்றுவித்து நாட்டில் அமைதி நிலவச் செய்து மக்களது வாழ்வில் நிலைத்த இன்பம் செய்யும் பணியில் கண்ணனார் பெரிதும் உழைத்துப் பயன்கண்டார். அவரது புலமைநலம் கண்டு வியந்த வேந்தன் அவர்க்கு மிக்க சிறப்பினைச் செய்தான். அந்நாட்டில் இன்றும் புகழ்மிக்கு விளங்கும் கண்ணனூர் அன்று இவர் பெயரால் ஏற்பட்டிருக்குமென நினைத்தற்கு இடமுண்டாகிறது. இடைக்காலத்தே இது சிறைக்கல் பகுதியை யாண்ட வேந்தர் தலைநகராய் விளங்கிற்று. மேலும் அவன் உம்பற்காடு என்ற பகுதியில் ஐஞ்நூறு ஊர்களைக் கண்ணனார்க்குப் பிரமதாயம் கொடுத்தான். உம்பற்காடு என்பது இப்போது நீலகிரிப் பகுதியில் நம்பலக்காடு என்ற பெயர்பெற்று நிலவுகிறது. இஃது இப்போது வயனாடென வழங்கும் பண்டைய பாயல் நாட்டின் ஒருபகுதியாக இருந்து ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் நீலகிரி சில்லாவில் சேர்க்கப் பெற்றது. திருவிதாங்கூர் அரசைச் சேர்ந்த வைக்கம் என்ற நகரத்தில் உம்பற்காட்டு வீடு என்றொரு வீடு இருந்து உம்பற்காட்டின் பழமையை உணர்த்தி நிற்கிறது.[2]

இவ்வாறு கண்ணனார் இமயவரம்பனுடைய பேரன்பு பெற்றுச் சிறப்புடன் இருந்துவருகையில், அவர்க்குத் தன்னூர்க்குச் செல்ல வேண்டுமென்ற விருப்பமுண்டாயிற்று; வேந்தனிடத்தில் தமது கருத்தைக் குறிப்பாய்த் தெரிவித்தார். அப்போது சேரலாதனது முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டு நடைபெற்றுக்கொண்டிருந்தது. கண்ணனார்க்கும் முதுமை நெருங்கிற்று. இமயவரம்பன் அவரது விருப்பத்தைப் பாராட்டித் தன்னாட்சியில் அடங்கிய உம்பற் காட்டின் தென்பகுதியான தென்னாட்டு வருவாயில் ஒருபாகத்தை அவர் பெறுமாறு திருவோலை எழுதித்தந்து சிறப்பித்தான்; அச்சிறப்பின் நினைவுக்குறியாகச் சிறப்புடைய ஊரொன்றைக் கண்ணன்பட்டோலை என்று மக்கள் வழங்கத் தலைப்பட்டனர். இப்போதும் அவ்வூர்

[1] Malabar Series: Wynad, p. 5. [2] Cera Kings by K. G. Sesha Iyer, p. 14.

குடநாட்டின் தென்பகுதியில், பாலக்காட்டுத் தாலூகாவைச்சேர்ந்த தென்மலைப்புறம் என்ற பகுதியில் இந்தக் கண்ணன் பட்டோலை என்ற பெயருடனே அவ்வூர் இருந்து வருகிறது.

இச் சிறப்புப் பெற்ற கண்ணனாருக்கு இமயவரம்பன்பால் உண்டான அன்புக்கு எல்லையில்லை. அவனை வாழ்த்த வேண்டுமென்ற எண்ணம் அவர்க்கு உண்டாயிற்று. "சேரலாதனே நிலமும் நீரும் வளியும் விசும்பும் போல நீயும் அளப்பரிய பண்புகள் கொண்டவன் நீயும் ஞாயிறும் திங்களும் பிற கோள்களும் போல ஒளியுடையவன். பாரதப்போரில பாரதவீரர்கட்குத் துணைசெய்துயர்ந்த அக்நான் போன்ற கைவண்மை உன்பால் உளது; போரில் பகைவர் பீடழித்த முன்பன்; மாற்றலாகாது எனப்படும் கூற்றையும் மாற்றவல்ல ஆற்றல் உனக்கு உண்டு. நீ சான்றோர்க்கு மெய்ம்மறை; வானுறையும் மகளிர் நலத்தால் நிகர்ப்பன குறித்துத் தம்மில் இகலும் பெருநலம் படைத்த நங்கைக்குக் கணவன்; களிறூட்டிப் பகைப்புலத்தை யுழும் படையோர் உழவன்; பாடினியைப் புரக்கும் வேந்தன். நின்முன்னோர் இவ்வுலகு முழுதுமாண்ட பெருமையுடையர்; அவர்களைப்போல நீயும் பெரும்புகழ் பெற்று வாழ்வாயாக"[1] என வாழ்த்தினர்.

சின்னாட்குப்பின் நெடுஞ்சேரலாதன் அவர்க்குப் பொன்னும் பொருளும் நிரம்ப நல்கித் தானே காலின் ஏழடிப் பின்சென்று வழிவிட, கண்ணனார் தமது உமட்டூர்க்குச் சென்றார். அரசியற் சுற்றத்தாரும் அவர்செய்த தொண்டினைப் பாராட்டி அவரை வாயார வாழ்த்தினர்.

உமட்டூர்க்குப் போந்த கண்ணனாரை ஏனைச் சான்றோர் கண்டு அளவளாவி இன்புற்றனர். உம்பற்காட்டு வேதியரும் தென்னாட்டுச் செல்வர்களும் அவரைச் சிறப்புடன் வரவேற்றனர். கண்ணனார் தம்முடைய நாட்டில் இனிதுறைவாராயினர்.

---

[1] பதிற். 14.

ஆபயன்

வித்துவான், ஆ. சிவலிங்கனார் அவர்கள், விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் (560)

என்பது திருக்குறள். இக்குறளுக்குப் பரிமேலழகர், "காத்தற்குரிய அரசன் காவானாயின், அறனில்லாத அவன் நாட்டுப் பசுக்களும் பால் குன்றும், அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்" என உரை யெழுதினர். "ஆபயன் குன்றும்" என்பதற்குப் "பசுக்களும் பால் குன்றும்" என்று எழுதியவர், விசேடவுரையில், 'ஆபயன்: ஆவாற் கொள்ளும் பயன்' என்றும் எழுதியுள்ளார். உரையில், 'ஆவானது குன்றும்' என எழுவாய்த் தொடர் நிலையில்—அல்வழித் தொடர் நிலையில்—பொருள் எழுதியுள்ளார். எனவே 'ஆ' என்ற சொல் குன்றும் என்ற சொல்லைப் பொருட் பொருத்தமுறத் தழுவியதாகக் கொள்ள வேண்டும். குன்றுவது பயனாயினும் ஆவின் தொழிலாக (இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றி)ச் சொல்லப்பட்டதாகக் கூறியுள்ளார். ஆனால் விசேடத்தில் 'ஆ' என்பது 'பயன்' என்பதையே பொருட்பொருத்தமுறத் தழுவியதாகக் கொண்டு, 'ஆபயன்' என்பதை மூன்றும் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகையாக—வேற்றுமைவழியில் விளக்கியுள்ளார். அல்வழித் தொடர் நிலையில் 'ஆபயன்' என்பது பொருந்தும்; ஆனால் வேற்றுமைத் தொடர் நிலையில் 'ஆப்பயன்' என்று மிகுக்கவேண்டும். "ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர்" என இளங்கோவடிகளும் கூறியுள்ளமை காண்க. வள்ளுவர் கூற்று 'ஆபயன்' என்பதாம். பரிமேலழகர் உரையும் 'ஆபயன்' என்பதற்கே ஏற்றதாம்; ஆனால் விசேடம் ஏற்றதன்று, இவ்வாறு மாறுபடப் பரிமேலழகர் எழுதமாட்டார்; ஆகவே விசேடவுரையின் இப்பகுதி பரிமேலழகரதன்றாம்.

'ஆ' என்பது தமிழ்ச்சொல். 'பயன்' என்பதும் தனித் தமிழ்ச் சொல். பயஸ் என்ற வடசொல்லின் திரிபாயின அது பயம்என நின்று பால் என்னும் பொருளதாம். 'ஆ' என்ற தமிழ்ச்சொல்லுடன் 'பயம்' என்ற சிதைவுச்சொல் நின்று இலக்கணப்படி புணர்ச்சி வேண்டாது (ஆ+பயம்=ஆபயம்) என்று கூடலாம். இவ்வாறு அமைதி கொள்ளலாம் எனினும் உரை அல்வழியிலும் விசேடம் வேற்றுமையி

னும் அமைவது பொருந்துவதில்லை. ஒருகால் அவ்வழித்தொடரா கவே கருதி, பயனாவது ஆவாற் கொள்ளும் பயன் என விளக்கம் கூறினரோ என என்னலாம் எனினும், ஆபயன் எனச் சேர்த்துக் கூறி 'ஆவாற் கொள்ளும் பயன்' என்றமையால் அவ்வாறு என்னுதற் கில்லை.

இனி இக்குறளுக்கு வேறு உரை கூறுவாரும் உளர். அறுதொழில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாம். பரிமேலழகர், "பசுக்கள் பால் குன்றிய வழி அவியின்மையானும் அது கொடுத்தற்குரியார் மந்திரம் கற்பம் என்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்; ஆகவே வானம் பெயல் ஒல்லாதென்பதாயிற்று" என விசேடம் கூறுமுகத்தான் பசுக்களும் அறுதொழிலோரும் உலகிற்கு இன்றியமையாதவர் என்பது படவைத்தார். அறுதொழிலோர் பார்ப்பனராவர். ஆவையும் பார்ப்பாரையும் இணைத்துக் கூறும் வழக்கம் நம் தமிழகத்திருந்தது என்பதையும் நாம் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" எனவும், "பார்ப்பார் பசுப்பத்தினிப் பெண்டிர்" எனவும் வருவன காணலாம். அவ்வாறே வள்ளுவரும் ஆவையும் அறுதொழிலோரையும் (பார்ப்பாரையும்) இணைத்துக் கூறினர் என்னலாம். அதற்கேற்பப் பரிமேலழகர் உரைஎழுதினர் என்னலாம்.

நாடு நடாவதற்கு உழவுத்தொழிலும் பிறதொழிலும் இன்றியமையாதனவாம். காவலன் காவலால் தொழில்கள் சிறக்க வேண்டும். இத் தொடர்புகொண்டு உரை கூறுவோர் "காவலன் காவான் எனின் ஆகு (வினையும்) பயன் குன்றும்; வரையறுத்த தொழிலுடையோர் நூல் மறப்பார்" என்று உரைப்பர். அவர் "ஆபயன், ஆகுபயன்; வினைத்தொகை" என்றும், உழவு, வாணிகம் முதலிய பல வகையினும் வினையும் பயன் பலவாதலின் பயன் என்றார் என்றும், அறுதொழில்=தத்தமக்கென்று வரையறுத்த தொழில் என்றும் நூல்=தொழில்நூல்கள் என்றும் கூறுவர்.

ஆகும் பயன், ஆம்பயன் முதலிய பெயரெச்சத் தொடர்கள் வினைத்தொகை யாகுங்கால் ஆகுவினை, ஆகூழ் என்றாற்போல ஆகு பயன் என வருமேயன்றி ஆபயன் என்று வாராது என எழும் தடையை ஈண்டு நினைத்தல் வேண்டும்.

உயிர்ப்பொருள் பேணல்

சாமுவேல் ஆபிரகாம் B. A; B. SC. (HONS.) L.T. விலங்கியல் அறைப்
பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

சாதாரணவழக்கில் "வன உயிர்கள்" என்ற சொற்றொடருக்குக் காட்டில் வாழும் கோள் வல் உளிடம், வாள்வரி வேங்கை, குமுறும் குடிஞை, மான்கணம், பிளிறும் களிறு, கானுங் கோழி என்றுதான் பொருள். ஆனால் காட்டிலே மேற்கூறியவற்றோடு வண்ணத்துப்பூச்சி போன்ற பன்னிறப் பூச்சிகளும், நத்தைகளும், விதவிதத் தாவரங்களும் நிறைந்து கண்ணுக்கோர் விருந்தாய் அமைந்துள்ளன. ஆகையால் "வன உயிர்" என்ற தொடர், மக்கள் உதவியின்றி, மக்களால் பராமரிக்கப் படாமல், தாமாகவே வாழ்க்கை நடாததும் எல்லா உயிர்களையும் குறிக்கின்ற தென்பது வெளிப்படை. ஈண்டு வனவிலங்குகளைப்பற்றி மாத்திரம் வினவுவோம். வனத்திலுள்ள செடி கொடி இனங்களைப்பற்றிப் பிறிதொரு கட்டுரையில் காண்போம்.

ஏன் நாம் வனவிலங்குகளைக் காப்பாற்றவேண்டும்? ஒரு நாட்டின் அழகு, நன்றாக அமைந்துள்ள அதன் நகர்களிலோ வானத்தோய் மாடமாளிகையிலோ கற்பாறைகளிலோ அமையவில்லை. ஆனால் அந் நாட்டின் அழகு குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஆங்குள்ள தாவரங்களிலும் அவற்றினூடே திரியும் பிராணிவர்க்கத்திலுமே அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. பெரியாற்றுத் தேக்கத்தில் படகிற் சென்றவர்கள் இருமருங்கிலும் உள்ள காடுகளில் களிறுகள் கணத்தைக் கண்டு களிக்காது திரும்பார்கள். சில ஆண்டுகட்கு முன்னர், கல்லூரிப் பிராணியியல் மாணவர்கள் புகைவண்டியில் திருமறைக்காடு சென்றுகொண்டிருந்தனர். இருபக்கங்களிலும் கண்ணுக் கெட்டியவரை இருந்த இருண்ட காடுகளையும் இடையிடையே இருந்த பசும்புற்றரைகளையும் கண்ணுற் கண்டு களித்துப் பறவைகளின் கர்ணாமிர்தமான கானத்தைக் கேட்டுத் திளைத்தும் பூச்சிகளின்

ரீங்காரத்தை ரசித்தும் சென்றனர். மான்களின் கூட்டம் என்ன! பறவைகளின் கூட்டம் என்ன! தூரத்தில், ஒருபனைமரத்தடியில் கள்ளமில்லாப் புள்ளிமான் தன் பிள்ளைகளாகிய குட்டிகட்குத் தீம்பால் ஊட்டிக்கொண்டு நின்றது. புகைவண்டி பக்கத்தில்வந்தவுடன் புள்ளிமான் துள்ளியோட அதன் பச்சிளங் குட்டிகளும் பின்னால் ஓடின. அக் காட்சியைக்கண்ட மாணவரது உள்ளமும், பள்ளத்தூடே செல்லும் வெள்ளம்போல் ஓடவே அவர்கள் மரப்பாவைகள் போல் சென்றனர். நயனத்திற்கும் மனத்திற்கும் காட்டுயிர்கள் நல்கும் நல்விருந்தை நவில ஆயிரம் நாவுகள் படைத்தாலும் நம்மால் முடியாது. 'பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய்ச் செங்கால் நாரை' யிடத்துப் பாண்டியன் தன் மனத்தைப் பறிகொடுத்தானன்றோ!

காடுகளும் அவற்றிலுள்ள பற்பல உயிர்களும் புலவர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களுக்கு, உசந்த உயர்ந்த உவமானங்களையும் ஈந்து அவர்களின் பாடல்களுக்குப் பொருணயம் பொருந்தச் செய்துள்ளன. புலவர் ஒருவர் தலைவன் தலைவிக்கு எப்படி உதவவேண்டும் என்பதற்கு ஓர் உவமானம் தேடினர். ஒரு சமயம் காட்டினூடே சென்றுகொண்டிருக்கும் போது ஓர் அரிய காட்சியைக் கண்ணுற்றார். ஒரு கலைமான் தன் பிணையுடன் நீர் வேட்கையால் அல்லலுற்று அலையும்போது ஒருசுனையில் சிறிதளவு தண்ணீரைக் கண்டது. அந்நீர் இருசீவன்களுக்கும் போதாது; ஆகவே பெண்மான் நீரைப் பருகும் போது ஆண்மான் நீரைப் பருகாது, பருகுவது போல் பாவனை செய்தது. அவ்வாறு ஆண்மான் செய்யாவிடின், தன் தலைவன் தண்ணீர் பருகவில்லையே என்று அதுவும் குடியாது. அவை இரண்டிற்குமிடையேயுள்ள அன்பு எத்தன்மைத்து!

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தான்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி"—ஐந்திணையம்பது.

புறநானூறு அகநானூறு முதலிய சங்கநூல் குழலில் உள்ள மலை முதலிய நிலங்கள் அவற்றில் வாழும் உயிர்கள் இவற்றின் பெற்

நிலை உணர்த்தும் இயற்கைப் பாட்டுக்கள் அநேகம் இருக்கின்றன. அப் பாக்களின் வாயிலாகப் புலவர்கள் எவ்வாறு வன விலங்குகளைப் பற்றி நுட்பமான குறிப்புக்களையும் தனித்தறிந்து, அவைகளைத் தம் பாடல்களில் கற்பனையாகக் கவினுற அமைத்தன ரென்றும் நாம் அறியலாம்.

வனஉயிர்களைப் பாதுகாப்பதற்கு மூன்றாவது காரணமும் உண்டு. இயற்கை அன்னை தன் எண்ணிறந்த குழவிகளாகிய பலவித உயிரினங்களும் ஒன்றை யொன்று சார்ந்திருக்க வேண்டிய நிலையில் வைத்துள்ளாள் ஒரு பிராணியின் அல்லது தாவரத்தின் வாழ்க்கை அதைச் சுற்றியுள்ள பிறபிராணியின் அல்லது தாவரத்தின் வாழ்க்கையோடு பிணைக்கப்பட்டுள்ளது. ஆகையால் குறிப்பிட்ட ஒரு பிராணியோ அல்லது தாவரமோ ஒரு சூழலில் எண்ணிக்கையில் குறைபவோ அல்லது கூடவோ அல்லது அப்பிராணி சூழலிலிருந்து அறவே மறைபவோ நேரிடுமானால் அம்மாறுதல் பிறஉயிர்களிடையே தடுமாற்றத்தை யுண்டுபண்ணும். இந்நெருங்கிய தொடர்பைத்தான் சார்ல்ஸ்டார்வின் என்ற சான்றோர் உயிர்ப்பிணைப்பு அல்லது உயிர்ப்பின்னல் என்று உரைத்துப் போந்தார். இப் பின்னலை, சார்லஸ் டார்வின் சான்றுகொண்டே நன்கு விளக்கலாம். இங்கிலாந்தின் ஒரு பகுதியிலுள்ள பூனைகளின் எண்ணிக்கைக்கும் அங்குள்ள க்ளோவர் (clover) என்னும் தாவரத்தில் ஏற்படக்கூடிய அயல்பராகச் சேர்க்கைக்கும் என்னதொடர்பு இருக்கக்கூடும் என்று நாம் வினவலாம். டார்வின் தரும் விடையைப் பாருங்கள். ஓரிடத்தில் பூனைகள் பெருகுமானால் அங்கு வயல்எலிகளின் எண்ணிக்கை குறையும். அப்போது அவ் வெலிகளால் துன்புறுத்தப்படும் ஒருவித ஈக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்; ஈக்கள் அதிகமானால் அயல்பராகச் சேர்க்கை அதிகரிக்கும். அதன் விளைவாக மகசூலும் அதிகப்படும். இது டார்வினுடைய அரிய ஆய்வு. “வரப்புயர” என்று வாயார வளவனை வாழ்த்திய ஒளவைப்பிராட்டியும் இவ்வுயிர்ப்பின்னலைக் கண்டறிந்தாள் என்று நாம் எண்ண இடமிருக்கின்றது.

இவ்வுயிர்ப்பின்னற் கொள்கை எவ்வாறு செயலாற்றுகிறதெனப் பார்ப்போம். சிறுத்தையின் உணவு பாபூன் குரங்குகள். கெனியாவின் வடபாகத்தில் வேட்டைக்காரர் சிறுத்தைகளைச் சுட்டு வீழ்த்தினர். என்ன விளைவு? குரங்குகள் ஏராளமாகப் பல்கிப் பெருகி மக்களின் உணவுப்பயிர்களை அழிக்க முற்பட்டன. நம் நாட்டிலும் கூட புலி சிறுத்தை முதலிய புலாலுண்ணிகளை மக்கள் கொன்றதால் உணவுப் பயிர்களைப் பாழாக்கும் பன்றிக்கூட்டம் பல்கிவிட்டன. இன்னும் தற்காலத்தில் அநேகப் பூச்சிக் கொல்லிகளும் (insecticides) களை கொல்லிகளும் (weed killers) விவசாயத்தில் பயன்படுகின்றன. ஆனால் இவை உயிர்ப்பின்னலைக் குலைத்துவிடுமோவென உயிர் நூல் வல்லுநர் அஞ்சுகின்றனர். ஏனெனில் மேற்கூறிய மருந்துகள் அயல் பராகச் சேர்க்கை புண்டுபண்ணும் பிராணிகளான தேனீக்களையும் கொன்றுவிடுவதால் அநேக பழமரங்களில் அயல்பராகச் சேர்க்கை தடைப்படுகிறதென்பர். கரும்புத் தோட்டங்களில் B. C H. என்ற பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தும்போது கரும்பைத் துளையிடும் பூச்சிகள் அதிகரிக்கின்றனவாம். ஏனெனில் அம்மருந்து கரும்பில் துளையிடும் பூச்சிகளது முட்டைகளை யழிக்கும் பூச்சிகளாகிய ட்ரிக்கோக்ராமா (Trichegramma) வைக் கொன்றுவிடுகிறது. மேற்கூறியவற்றால் அறியக்கிடப்பது என்னவெனில் உயிர்கள், முக்கியமாகச் சாறுயிர்கள் ஒன்றோடொன்று தம்வாழ்வுக்குவேண்டியவுணவு முதலிய காரியங்களில் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அப்பின்னலில் உள்ள ஓர் உயிர் வாழ்க்கையில் நாம் தலையிடுவோமானால் நமது அத்தலையீடு பிறவுயிர்களுக்கு எண்ணரிய இடுக்கண் ஏற்படுத்தும் என்பதுதான்.

இன்னும் வனவிலங்குகள் நமக்குப் பல்லாற்றானும் பயன்படுகின்றன. "யானை இருந்தாலும் ஆயிரம்பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்". அதன் தந்தமும் எலும்புகளும் பலவழிகளிலும் பயன்படுகின்றன. காட்டில் பெரியமரங்களைத் தூக்கவும் இழுக்கவும் யானைகள் உதவுகின்றன. உத்தரப் பிரதேசத்தில் அவை நிலத்தை உழுது உணவு

உற்பத்திசெய்யும் உன்னதசேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. பொன்னார் மேனியன் புலித்தோலை அரைக்கசைத்தார். அன்னாரின் அடியார்கள் வாளாவிருப்பரோ? தாம் அமரும் ஆசனங்களிலும் அழகிய தரையிலும் விரிக்கப் புலி இறந்தகை இவர்க்கின் தோல்மட்டுமன்றிப்புள்ளி மான் தோலும் வேண்டுமென்கின்றனர். நறுமணம் வீசும் கஸ்தூரி, கஸ்தூரி மான் வயிற்றுப்பாகத்திலே ஓர் சுரப்பியில் உண்டாகின்றது. ஆண்மான் வயிற்றில் கலவிக்காலத்தில் அது உண்டாகின்றது. இக் கஸ்தூரி அதிக மணமுள்ளது. சாயத்தொழிலில் நிறங்கொளிகள் (Mordants) எவ்வாறு பயன்படுகின்றனவோ அவ்வாறே கஸ்தூரியும் பிற தாவரசம்பந்த மணத்தை நிலைப்படுத்துகிறது. 1935-வது ஆண்டில் சைனாவும் திபெத்தும் சேர்ந்து 27,000 சின அவுன்ஸ் எடையுள்ள கஸ்தூரியை ஏற்றுமதி செய்தன. இதற்காக 25,000 கஸ்தூரி மான்கள் கொல்லப்பட்டன. என்றே இரங்கத்தக்கது யாதெனின், கஸ்தூரியில்லாப் பெண்மான்களும் கருணையின்றிக் கொல்லப்படுகின்றன.

புனுகுப்பூனையைப்பற்றிச் சற்று நுணுகி ஆராய்வோம். புனுகு உண்டாகும் சுரப்பி இனப்பெருக்க அவயவத் துவாரத்தைச் சுற்றி அமைந்துள்ளது. இதுவும் வாசனைப் பொருளாகவும் மருந்துப் பொருளாகவும் பயன்படுகிறது. ஒரு தோலாப் புனுகு பத்து ரூபாய்விலையாகும். ஜாவாத்தீவினர் புகையிலைக்கு நன்மணம் புகுத்தப் புனுகைப் பயன்படுத்துகின்றனர். கடையில் விற்கப்படும் புனுகு வெண்ணெய், எண்ணெய் சேர்ந்த கலப்பாகும். அனந்தப்பூர் போன்ற பாகங்களில் வீட்டில் உள்ள எலிகளைக் கொல்வதற்குப் புனுகுப்பூனைகளை வளர்க்கிறார்கள்.

சாதாரண நரி உணவுப் பயிர்களுக்கு நட்டத்தையுண்டுபண்ணும் எலிகளையும் நண்டுகளையும் உண்டு விவசாயிக்கு ஓர் நண்பனாக உள்ளது. குளிர்மண்டலத்தில் மயிர்த்தோல் மிருகங்கட்கு மண்டும் துன்பங்களுக்கோர் எல்லையில்லை; வெண்ணரிகளின் தோல் தனிச்சிறப்பு வாய்ந்தது. அந்தோ பரிதாபம்! அவைகளின் தோலுக்காக எண்ணரிய வெண்ணரிகள் இறக்கவேண்டியுள்ளன. கனடாப் பக்கத்தில்

இளவரசர் எட்வர்ட் தீவில் 50 முதல் 300 வரையுள்ள வெண்ணரிப் பண்ணைகள் உண்டு. ஒரு வெண்ணரியின் தோல் விலை சுமார் நூற்று எண்பது ரூபாயாகும். ஆனால் ஒரு "பிளாட்டினம் நரி" யின் தோலோ தொளாயிரம் ரூபாய் முதல் ஆறாயிரத்து அறுநூற்று ஐம்பது ரூபாய் விலையாகும். சைனாக்காரர்கள் சிறுவை நரி (கருப்புத் தோலில் சிதறலாக வெள்ளைமயிர்கள் உள்ளன) யின் தோலையும் ஸேபில் (sable) என்ற இன்னொரு மிருகத்தின் தோலையும் சேர்த்து உயர்தர உடை உண்டுபண்ணுகின்றனர். ஸேபில் மிருகத்தின் மயிரிலிருந்து வர்ணந்தீட்டும் தூரி அல்லது துடைப்பான் (Brush)) செய்யப்படுகிறது. சின்சில்லா (chinchilla) என்ற கொறிக்கும் பிராணி (Rodent) யின் தோல் மயிரினின்று ஒரு மேலசட்டை செய்யச் சுமார் மூவாயிரம்பவுன் ஆகுமாம். நம்நாட்டில் புலவர்களுக்குப்பொன்னாடை போர்த்த இம் மயிராடையின் விலையில் ஆயிரத்திலொரு பங்காகிலும் செலவிடுகிறோமா?

கீரிப்பிள்ளையை நம் அகத்தில் வளர்த்தால் அங்குள்ள பூச்சி, பாம்பு, எலி, தேள் முதலியவை அறவே அழிக்கப்படும் என்கிறார்கள். ஜாவாத் தோட்டங்களில் இருந்த எலிகளையும் பாம்புகளையும் போக்க, நம் கீரிகள் கடல்கடந்து சென்று அம்மிருகங்களை ஒழித்துக் கட்டி வாகை சூடிக்கொண்டன.

இனிச் சில காட்டுயிர்கள் எவ்வாறு துன்புறுத்தப் படுகின்றன வென்றும் அவைகளை எவ்வாறு பாதுகாக்கலாம் என்றும் பார்க்கலாம். நாகரிகமில்லாக் கற்கால மனிதன் காட்டு மிருகங்களைத் தன் உணவுக்காக மாத்திரம் கொன்றான். நாகரிகம் முற்றிய நவீன மனிதன், துப்பாக்கிகளைக் கையிலேந்திக் காடுசென்று தன் நேரப்போக்குக்காகச் சுட்டுத்தள்ளுகிறான். அமெரிக்க ஐக்கியநாட்டு முதலாளி பணஞ்சம்பாதிக்கும் வேலையில் அயர்ச்சியடைந்து, வருகிறார் ஆபிரிக்காவுக்கு வானவூர்தியில்; இரண்டொருநாளில் வந்துவிடுகிறார்; பயமின்றிக் கள்ளம் கபடமில்லா உள்ளத்தோடு துள்ளி விளையாடும் விலங்குகளைக் கன்னெஞ்சனான முதலாளி சுட்டுத்தள்ளுகிறான். சொ

நீர் சொரிந்தும் குடல்சரிந்தும் விலங்குகள் சாவதைக்கண்டு தன் வீரமாகிய புன்னீர்மையைப் புகழ்ந்து கொள்ளுகிறார் அவ் வன்கண்ணர். மனக்களிப்புக் கடிது நீங்கிவிடுகிறது; திரும்பிவிடுகிறார் முதலாளி தன் ஊருக்கு. மன அயர்ச்சியைப் போக்க என்ன முயற்சி! உள்ளக் களிப்பை உதறித்தள்ள வனவிலங்குகளின் உதிரத்தை வடித்து அவற்றின் இறப்பை உண்டாக்குவது நாகரிகத்தின் சின்னம்! வாயில்லாத வனவிலங்குகளுக்கு உறும் அல்லல்கண்டு அக மகிழ்வது மனிதப் பண்பாடு! நம் நாட்டில் வெள்ளையராட்சியின்போது அரசப் பிரமுகர்கள் (Viceroys) தாண்டவமாடியகாலை, தங்கள் அடக்குமுறைகளை ஆரண்யங்களிலும் ஆண்டுள்ள விலங்குகளிடையிலும் கையாண்டார்கள். லின்லித்கோ பிரபுவும் அவரது பணியாளரும் ஒரேநாளில் பரத்பூர் காட்டில் 4273 வாத்துக்களைச் சுட்டு வீழ்த்தினார்கள். மனிதனுக்கு விளையாட்டு, களியாட்டு; விலங்குகட்கு வினையாட்டம். நமது முன்னோர் சுதேசமன்னர்கள் மேற்கூறிய வெள்ளையருக்குப் பின்னடைந்தவர்களா? இல்லை. ஸர்குஜா முன்னாள் மன்னர் 1400 புலிகளைக்கொன்ற புனிதவீரர்! பகுத்தறிவில்லா மாக்கள் பசியாயிருக்கும்போது மற்றப்பிராணிகளை உணவுக்காகக்கொல்கின்றன. பகுத்தறிவிற் சிறந்த மக்கள் தமது நேரப்போக்குக்காக மிருகங்களைக் கொல்லுகிறார்கள். பிறிதின் நோயைத் தன்நோய் போல் போற்றா மக்கள் அறிவு படைத்ததனால் யாது பயன்? 1885-ம் ஆண்டில் டில்லியைச் சுற்றிலும் இருந்த காடுகளில் இருந்த 1200 சிங்கங்களைக் கொன்று, தான் ஒரு வீரன் எனச் சிங்கநாதம் செய்தனனாம்; என்ன வீரம்?

இதனால் நாம் சிங்கம் புலி, கரடிகளைக் கொல்லவே கூடாது என்று வாதாடவில்லை. ஒருகிராமத்திற்குள்ளேயோ அல்லது அதன் சுற்றுப் புறத்திலேயோ மாடுகளையும மனிதரையும் கொல்லும் துட்ட மிருகங்கள் சுட்டுத்தள்ளப்பட வேண்டும். அரசியலாரே அக் கொடிய விலங்குகளைக் கொல்பவர்களுக்குத் தகுந்த சன்மானம்

அளிக்கின்றார்கள். ஆனால் மனிதசஞ்சாரத்திற்கப்பால் இருண்ட காட்டில் வசிக்கும் விலங்குகளை அநியாயமாய் நேரப்போக்குக்காக மனிதன் வரம்பிகந்து வதைத்துக் கொல்லலாமா என்பதுதான் நம்முன் நிற்கும் கேள்வி. இயற்கையன்னை ஒவ்வொரு உயிர்ப் பொருளுக்கும் ஒவ்வொருவேலை கொடுத்துள்ளாள். உயிர்நூல் வல்லுநர் சிற்சில தாவரங்களும் பிராணிகளும் எவ்வாறு ஒன்றுக்கொன்று உதவுகின்றன வென்றும், அவ்விருவகை உயிர்களும் மக்களுக்கு உதவுகின்றன வென்றும் கண்டறிந்துள்ளனர். பாம்புகளால் நமக்கு என்ன பயன் உண்டென்று நாம் வினவலாம். இவை நம்உயிர்களுக்குத் தீங்கிழைக்கும் எலி வர்க்கத்தை ஒழிக்கின்றன வென்பதை நாம் மறக்கலாகாது. இன்றைக்கும் மலேயா நாட்டில் பெரிய தானியக்கிடங்குகளின் அடித்தளத்தில் எலிகளையும் பெருச்சாளிகளையும் கட்டுப்படுத்த மலைப் பாம்புகளை விட்டுவைக்கிறார்கள்! நாகம், விரியன் முதலிய நச்சரவங்களின் நஞ்சினின்று புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்து தயாரிக்கப் படுகிறதென்பதை நாம் மறக்கலாகாது. உயிர்ப் பின்னலில் ஒவ்வொரு உயிருக்கும் உரியதொண்டும் அதனால் விளையும் பயனும் உண்டு. அவை நமக்கிப்போது விளங்காத புதிராக இருக்கலாம். முல்லைக்குப் பற்றுக்கோடு ஈந்த பாரியும், குளிரால் நலிந்த மயிலுக்குப் போர்வை போர்த்த பேகனும் வாழ்ந்த நம் நாட்டில் நாம் பிற மிருகங்களுக்கு அல்லல் விளைக்கலாமா?

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்

என்பதல்லவா ஆன்றோர் கொள்கை?

மாம்பழக்கவி—சிலபாடல்கள்

:(-:O:-):

பண்டித ரா. திம்மப்பையர், ஒய்வுபெற்ற விரிவுரையாளர், சேலம் கல்லூரி.

வித்தகர் மெச்சும் முத்தமிழ்க் கவிச்சக்கரவர்த்தியாகிய உத்தம மாம்பழக்கவிச்சிங்கநாவலர் தம் செய்யுட்களின் அருமை பெருமைகளை அறியாதவரை அறியாதவரென்றே இம் மகிதலத்தோர் அறைவர். பழங்காலக் கவிஞரைப்போன்று சிலேடை, யமகம், திரிபு பல்வகைய சித்திரமமைந்த கவிகள் பாடுதலில் இவர் பெரிதும் கைதேர்ந்தவரென்பது இவர் தம் சுவைநலங்கனிந்த திருப்பழனிவெண்பா, பழனி வெண்பாவந்தாதி, குமாரனந்தாதி, சிவகிரி யமகவந்தாதி முதலிய நூல்களானும், சந்திரவிலாசம், பல்வேறு தனிக்கவிகள் ஆதியவற்றானும் நன்கு விளங்கும். இனி யிவற்றை யுலகின்புறற் பொருட்டு அக் கவிஞர்பிரானது பனுவல்களினின்று சில உதாரணங்களைக் காட்டிச் செல்வேம்.

திருப்பழனி வெண்பா

சீராய வேள்வி செயுமிடனெ லாம்வேத
பாரா யணர்சூழ் பழனியே—போராசை
சிந்திப்ப வந்தடுப்பார் தேவாதி தேவவெனச்
சிந்திப்ப வந்தடுப்பார் சேர்வு.—44.

(இதன் பொருள்.) சிறப்புப் பொருந்திய யாகங்களைச் செய்யுமிடங்களிலெல்லாம் வேதபாராயணம்புரிகின்ற அந்தணர்கள் சூழ்தற்கிடமாகிய பழனியம்பதியானது, மிக்க ஆசைகளை உதறித்தள்ளித் தீவினைகளைப் போக்குதற்கேற்ற முயற்சியைக் கொண்ட தொண்டர், தெய்வங்களுக்கெல்லாம் முதன்மைத தேவனேயெனத் தியானித்த மாத்திரத்தில் அவர்களிடத்தே எழுந்தருளி அருள்புரிய நெருங்குபவராகிய முருப்பெருமானார் நித்தியவாசம் புரிதற்கேற்ற இடமாம்; (என்றவாறு.)

புத்தியில ராயிருந்த போதிலுங்கண் டாலுடனே
பத்தியையுண் டாக்கும் பழனியே—முத்திதருந்
தாரகவி நாயகனார் தந்துணைவர் மெய்யருள்வித்
தாரகவி நாயகனார் சார்பு.—35.

(இ-ள்.) குமாரப்பெருமானைத் துதித்தற்கேற்ற புத்தியில்லாத வராயிருந்த போதிலும் ஒருகால் பார்த்தமாத்திரத்திலே உடனே மிக்க பத்தியை அவர்கட்கு உண்டாக்குதற் கேற்ற பழனியம்பதியே தொண்டர்க்கு மோட்சநிலையை யருள்வதற்றகேற்ற தாரகமந்திரத் திற்குரிய விநாயகமூர்த்தியினது இளையசகோதரரும் உண்மையாகிய அருளோடு கூடிய வித்தாரகவிகளை யியற்றும் புலவர்க்குத் தலைவரு மாகிய முருகப்பெருமானாரது இருப்பிடமாம். (எ-று.)

குறிப்பு:— மேற்போந்த செய்யுட்களின் பின்னிரண்டடிகளில் (முதலிரண்டு சீர்கள் வரை) வந்த எழுத்துக்களே மீண்டும் வந்து பொருள் கொள்ளுங்கால் வெவ்வேறாகப் பிரிந்து பொருள் கொள்ளக் கிடந்தமையின் யமகம் என்னும் மடக்கணி பொருந்தி யிருத்தல் காணத்தக்கதாம்.

குமாரனந்தாதி.

தருமங்க ளங்கலங் காரம் பெறத்திருத் தார்பிறர்மேல்
வருமங்க ளங்கலங் குங்கொலை காமம் வளர்த்தவர்செந்
திருமங்க ளங்கலந் தோங்கும் பழனிச்செவ் வேளையுன்னார்
கருமங்க ளங்கலந் தீர்வதெவ் வாறிக் கனநிலத்தே—18.

(இ-ள்.) திண்மையடைந்த இவ்வுலகின்கண் செம்மையாகிய அழகிய மங்கலத்தன்மை கலந்தவர்களுள்ள பழனியம்பதியி லெழுந் தருளியுள்ள செந்நிறமுள்ள முருகப்பிரானைத் (தம்மனத்தே) தியானி யாதவர்களாய்ச் (செய்தற்குரிய) அறங்களைத் தாமிருக்கின்ற இடத் தில் அழகுபெறத் திருந்தப்புரியாமல், பிறர்மீது வைராக்கியம் கள்ள நினைவு, மனக்கலக்குதற்குக் காரணமான படுகொலை, பெண்ணிச்சை யாதிய தீயகுணங்களை (சிலமாந்தர்) வளரச் செய்கின்றார்களே; (இப் பேதை மாக்கள்); இத்தீவினைகள் ஒழியப்பெறுவது (இனி) எவ் வாறோ? (எ-று.)